புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்க இலக்கியங்களில் கடலும் அதன் நிறங்களும்

கா.பெரிய கருப்பன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி
மதுரை-625009

ஆய்வுச்சுருக்கம் :

தமிழ்மொழியின் பயன்பாட்டினை வைத்தும் அதில் எழுந்த இலக்கிய இலக்கண நூல்களின் தன்மை, போன்றவற்றால் அது நிலைபெறும் கால அளவை நிர்ணயம் செய்கின்றனர். அந்த அளவில், காலத்தால் மிகவும் தொன்மை வாய்ந்த மொழியாகத் தமிழ் மொழி உள்ளது. மேலும், உலக நாடுகள் பலவற்றில் தமிழ் மொழியானது அந்நாட்டின் தாய்மொழியாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்றதென்றால் அது இன்றைய காலச்சூழலில் சாலப் பொருத்தமாக இருக்கும். அங்ஙனம் சிறப்புடையனவாகக் கருதப்பெறும் தமிழ் மொழியானது, தமிழர்களின் பண்டைய மரபுசார் பண்பாட்டிற்கும் அரண்சேர்க்கக்கூடிய பல்வேறு இலக்கியச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. அவ்வகையில் நோக்குங்கால் தலைமை சான்ற இலக்கியங்களாகச் சங்கஇலக்கியங்கள் கருதப்படுகின்றன. அத்தகைய சங்க இலக்கியத்தில் காணலாகும் நெய்தல் திணை சார்ந்தமைந்தப் பாடல்களில் சுட்டப்பட்டுள்ள கடல் சார் நிறங்கள் குறித்தும் அதன் ஒப்புமை,வேற்றுமையை சங்கப் புலவர்களின் பதிவுகளின் வழி இவ்வாய்வு எடுத்தியம்ப முற்படுகிறது.

கருச்சொற்கள்:

- கடலின் நிற வேறுபாடு
- தெளிந்த கடல்
- கடலின் நிறமும் பெருந்தெய்வ நிறமும்
- கரிய நிறமுடைய கடல்
- நீலநிறப் பெருங்கடல்

முன்னுரை:

தங்கள் வாழ்வியல் முறைகளை திணை சார்ந்தமைத்து வாழ்ந்தவர்கள் பழங்காலத் தமிழர்கள் என்பதை பல்வேறு தமிழ் இலக்கியங்கள் வாயிலாக காண முடிகிறது. அங்ஙனம் வாழ்ந்த புரவலர்கள் பலர், பல்வேறு புலவர்களை ஆதரித்ததன் காரணமாக அன்பின் ஐந்திணை எனப்படும் (குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை) ஐந்துவகை திணை சார்ந்தமைந்த பல்வேறு பாடல்களை பாடி வைத்துள்ளமையை சங்க இலக்கியங்களாகக் காண முடிகின்றது. அதில் நீரும் நீர் சார்ந்தமைந்த நிலமாகக் கருதப்பெறும் நெய்தல் நிலத்தினை முன்வைத்து அமைந்த பாடல்களில் காணலாகும் கடல் எனும் சொல்லாடல் துணைக்கொண்டு அச்சங்க இலக்கிய வரிகளில் சுட்டப்பட்டுள்ள, கடலின்கண் தோன்றும் நிறங்களின் வகைமைகளை ஆய்ந்து கொணர்வதே இவ்வாய்வாகும்.

கடலின் நிற வேறுபாடு

தெளிந்த கடல் நீரின்கண் தங்களது தொழிலை மேற்கொள்ளும் பரதவர்கள் எறிந்த கூரிய வேலின்கண் சிக்கிய பெரிய மீனின் உடலிருந்து வரும் குருதியின் காரணமாகவும் கடற்கரைப் பரப்பின்கண் பசிய நிறமுடைய பாசிகள் நெருங்கிக்கிடக்கும். அதனை அலைகள் வந்து மோதி

கலக்குவதால் உண்டாகும் நிறமாறுபாடு என்று இருவேறு காரணங்களால் தெளிந்த கடலில் காணலாகும் நீரின் நிறமானது மாற்றம் பெறும் என்பதை,

"குறியிறைக் குரம்பைக் கொலைவெம் பரதவர்
எறியுளி பொருத ஏமுற பெருமீன்
புண்ணுமிழ் குருதி புலவுக்கடல் மறுப்பட
விசும்ப ணிவில்லிற் போகிப்ப சும்பிசிர்"[1]

என்ற அகநானூற்றுப் பாடலில் புலவர் உலோச்சனார் கூறுவதிலிருந்து, கடலின் நிற மாறுபாட்டை அக்கடலின்கண் தோன்றும் அலைகளின் சுழல் மாறுபாடே எற்படுத்துகின்றன என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

தெளிந்த கடல்

கடல் என்பது பல்வேறு ஆறுகளிலிருந்து வரும் கலங்கிய நீரைத் தன்னகத்தே பெற்றாலும் அது தெளிந்த நீரினையுடையதாகவே காணப்படுகிறது. இதனைத் தோழி தலைவியிடம் கூறும் கூற்றாக சங்க அகப்பாடலில் காண முடிகிறது. அங்ஙனம், மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரிசாத்தனார் எனும் புலவர்,

"துஞ்சாக் கண்ணள் துயரடச் சாஅய்
நம்வயின் வருந்தும் நன்னுதல் என்பது
உண்டுகொல் வாழி தோழி தெண்கடல்
வன்கைப் பரதவர் இட்ட செங்கோல்"[2]

என்ற நற்றிணைப் பாடலில் 'தெண்கடல்' என்ற சொல்லாடலைக் குறிப்பிடுகிறார்.

இதற்கு, தெளிந்த நீரையுடைய கடல் என்று பின்னத்தூர் நாராயணசாமி என்பார் உரை காண்பதன் வாயிலாக, கடல்நீர் தெளிந்த தன்மை கொண்டதே என்பதை அறுதியிட்டுக் கூற முடிகிறது. இதுபோலவே, தெளிந்த நீருடைய கடல் குறித்து பத்துப்பாட்டினுள் மதுரைக் காஞ்சியின் ஆசிரியரான மாங்குடி மருதனார் என்பார்,

"திண்காழ் ஏற்ற வியல்இரு விலோதம்
தெண்கடல் திரையின் அசைவளி புடைப்ப"[3]

என்று மதுரைக்காஞ்சியில் குறிப்பிடுகிறார்.

இதில் தெண்கடல் என்பதற்கு 'தெளிந்த கடல்' என்று உரை கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து மேற்காண் நற்றிணைப் புலவரின் கருத்தினை மாங்குடி மருதனாரும் ஏற்று மொழிந்துள்ளமையை மதுரைக்காஞ்சியின் உரையின் வழி அறிய முடிகிறது.

கடலின் நிறமும் பெருந்தெய்வ நிறமும்

முன்பு தெளிந்தகடல் என்ற செய்தியை நற்றிணை மற்றும் மதுரைக்காஞ்சியின் ஆசிரியர்கள் குறிப்பிட்டதிலிருந்து சற்று நுட்பமாக ஆய்ந்த சங்க இலக்கிய அகநானூற்றுப் புலவர்களுள் ஒருவரான மதுரைக் கண்ணத்தனார் என்பார், தெளிந்த கடலானது மாலை நேரத்தில் எவ்வாறு நிறம் பெற்றுத் தோன்றுகிறது என்ற நிகழ்வினை,

"வெருவரு கருந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடலணி கொளாஅ
வந்த மாலை பெயரின் மற்றிவள்"[4]

என்று பதிவு செய்துள்ளார்.

இங்கு, இரு பெருந்தெய்வம் என்பதற்கு சிவன், திருமால் என்ற இருவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களின் நிறமாக முறையே, செந்நிறமும் கருநிறமும் சுட்டப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் இணைந்தது போன்ற நிறமாக மாலை நேரத்திலே கடலின் நிறம் காட்சியளித்தது என்பதனை புலவர் அகநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து, மாலை நேரத்தில் கடலின் நிறமானது செந்நிறமும் கருநிறமும் கலந்த நிறமாகக் காட்சியளிக்கும் என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

*கரிய நிறமுடைய கடல்*

*அகநானூற்றுப் புலவர் மாலை நேரக் கடலானது செந்நிறமும் கரிய நிறமும் கலந்த நிறமாகக் காட்சியளிக்கிறது என்பது முன்னைய பதிவு, இப்பாடலில், மாலை நேரக்கடல் கரிய நிறமாகத்தான் காட்சியளிக்கும் என்ற செய்தியை,*

*"சூடினகருங் கடல்முத்த மும்பன்மணி பிறவுமாங்*
*கொடுங்குடன் கோத்த உருளமை முக்காழ்மேல்*
*சுரும்பார் கண்ணிக் குசூழ் நூலாக"*[5]

*என்ற வரிகளில் கலித்தொகையின் மருதத்திணைப் புலவரான மருதனிளநாகனார் என்பார் கூறிப் போந்துள்ளமையை உற்று நோக்க வேண்டியுள்ளது.*

*இவ்வாறு கடலின் நிறமானது கரியநிறம் என்று சங்கப்பாடலில் இவர் கூற, இவரது கருத்துக்கு அரண் சேர்க்கும் விதமாக, அகநானூற்றுப் புலவரான உலோச்சனார் என்பாரும் கடலின்நிறம் கரிய நிறமே என்பதைச் சுட்டுகிறார். இதனை,*

*"பெருந்திரை முழக்கமொ டியக்கவிந் திருத்த*
*கொண்டல் இரவின் இருங்கடல் மடுத்த*
*கொழுமீன் கொள்பவர் இருள்நீங் கொண்சுடர்*
*ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை"*[6]

*என்ற பாடலில் 'இருங்கடல்' என்று குறிப்பிடுவதிலிருந்து, கடலின் நிறம் கரிய நிறம் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. இரவு நேரத்தில் எழும் அலைகளின் ஒலி மிகவும் அதிகமாக இருக்கும் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறே, புறநானூற்றில் சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியை பாடிய பரணர் என்ற புலவரும்,*

*"பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி*
*மாக்கடல் நிவந்தெ ழுதரும்*
*செஞ்ஞா யிற்றுக்கவி னைமாதோ"*[7]

*கடலின் நிறம் கரிய நிறம் என்பதை 'மாக்கடல்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.*

*இங்கு, 'மாக்கடல்' என்பதற்கு 'கரிய கடல்' என்று உரை கூறப்பட்டுள்ளது. இதன்கண் கடல் மாலை நேரத்தில் கரிய நிறமாகத தோன்றும் என்ற செய்தியை கலித்தொகையில் பாடியுள்ள மருதனிளநாகனாரின் வழி நின்றும் அகநானூற்றில் பாடியுள்ள உலோச்னார் வழிநின்றும் புறநானூற்றில் பாடிய பரணர் போன்ற பல்வேறு சங்கப்புலவர்கள் பாடிய பாடல்களில் காணலாகும் செய்திகளின் வழி ஒப்பிட்டு கரியகடல் எனக் கூறியுள்ள முறைமை தெளிவாகிறது.*

*நீலநிறப் பெருங்கடல்*

*இதுவரை கடலின் நிறம் கரிய நிறம் என்ற செய்தியை கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற நூல்களில் காணலாகும் பாடல்களில் குறிப்பிட்டதற்கு மாறான கருத்தாக, அகநானூற்றுப் பாடலில், கடலின் நிறமானது நீல நிறம் என்ற குறிப்பினைப் புலவர் குன்றியனார் என்பார்,*

*"கானல் மாலைக் கழிப்பூங் கூம்ப*
*நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப*
*மீனார் குருகின் மென்பறைத் தொழுதி*
*குவையி னரும்புன் னைக்குடம் பைசேர"*[8]

*என்று பதிவு செய்துள்ளார்.*

*இதில், கடற்கரைச் சோலையை அடுத்து காணப்படும் கழியில் வரிசையாகவுள்ள புன்னை மரத்தினது பூக்கள் குவியவும், நீலநிறப் பெருங்கடல் ஒலிமிகுந்து ஒலிக்கவும் என்ற செய்தியின் வழி, மேற்காண்பது உறுதிபட தெரியவருகிறது. இங்ஙனமே, நற்றிணையில் பெயர் தெரியாத ஆசிரியர் ஒருவரும் கடலின் நிறம் நீல நிறம் என்பதை, தனது பாடலில் பதிவு செய்துள்ளார். பரதவனின் மகளே தலைவி என்று குறிப்பிடுமிடத்து, பரதவரின் தொழிலுக்கு இடமாகும் பெரிய நீர் நிறைந்த பகுதியான கடலின் தோற்றத்தைக் குறிப்பிடும் முகமாக கடலின் நிறம் குறித்த பதிவினை மேற்கொண்டுள்ளார். எங்ஙனமெனில்,*

*"இவளே கானல்நன் னியகாமர் சிறுகுடி*
*நீல்நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு*

மீனெறி பரதவர் மகளே நீயே
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்"[9]

என்று குறிப்பிடுகிறார்.

இப்பாடலில், நீல நிறப் பெருங்கடல் என்று வெளிப்படையாகவே கடலின் நிறத்தைச் சுட்டி சென்றுள்ளமையின்வழி கடலின் நிறமானது நீல நிறம் என்பது தெளிவு.

மேற்காண் செய்திக்கு அரண் சேர்க்கும் விதமாக ஐங்குறுநூற்றுப் புலவராகிய அம்மூவனாரும்,

"அன்னை வாழி வேண்டன்னை நம்மூர்
நீனிறப் பெருங்கடற் புள்ளினானாது
துன்புறு துயர நீங்க
வின்புறவி சைக்குமவர் தேர்மணிக் குரவே"[10]

என்று பாடியுள்ளார்.

இதில் 'நீனிறப்பெருங்கடல்' என்று அம்மூவனாரும் வெளிப்படையாகக் கூறுவதிலிருந்து கடலின் நிறம் நீலநிறமாக இருந்தமையை அறியமுடிகிறது. இங்ஙனமே, கல்லாடனார் என்ற புலவரும் கடலின் நிறத்தினைக் குறித்து 'நீல்நிறப் பெருங்கடல்' என்றே குறுந்தொகை நூலில் பதிவு செய்துள்ளார்.

அதனை,

"வயச்சுறா எறிந்த புண்தணிந்து எந்தையும்
நீல்நிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்
உப்பை மாறி வெண்ணெய் தரீஇய"[11]

என்ற பாடல் வரிகளின் வழியே அறிய முடிகிறது.

இங்கு, கடலின் நிறம் நீலம் என்பது இவரின் கருத்து. இவ்வாறு, சங்கப்புலவர்கள் கூறும் கடலின் நிறம் குறித்த செய்திகளின் வழி கரிய நிறமும், செவ்விய நிறமும் கலந்தது என்ற குறிப்பினையும், கரிய நிறமுடையது என்ற குறிப்பினையும், நீல நிறமுடையது என்ற பதிவினையும் காண முடிகின்றது. இவ்வாறு, பல்வேறு கருத்துக்களைப் புலவர்கள் தாங்கள் கண்ட அளவில் கூறியுள்ளதன்வழி கடலின் நிறம் யாது என்ற மருட்சி ஏற்பட்டு தெளிவின்மையே நீடிக்கிறது. சுற்றுச் சூழலின் தன்மைக்கேற்ப கடலின் நிறம் மாறக்கூடியதாக இருக்கிறது என உய்த்துணரவும் வழி கோலுகிறது.

முடிவுரை

கடலின் நிற மாறுபாட்டை அக்கடலின்கண் தோன்றும் அலைகளின் சுழல் மாறுபாடே எற்படுத்துகின்றன என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

தெளிந்த கடலானது மாலை நேரத்தில் கடலின் நிறமானது செந்நிறமும் கருநிறமும் கலந்த நிறமாகக் காட்சியளிக்கும் என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

மாலை நேரக்கடல் கரிய நிறமாகத்தான் காட்சியளிக்கும் என்ற செய்தியை, கலித்தொகையின் மருதத்திணைப் புலவரான மருதனிளநாகனார் என்பார் கூறிப் போந்துள்ளமையை உற்று நோக்க விளங்குகிறது.

கடல் மாலை நேரத்தில் கரிய நிறமாகத தோன்றும் என்ற செய்தியை கலித்தொகையில் பாடியுள்ள மருதனிளநாகனாரின் வழி நின்றும் அகநானூற்றில் பாடியுள்ள உலோச்சனார் வழிநின்றும் புறநானூற்றில் பாடிய பரணர் போன்ற பல்வேறு சங்கப்புலவர்கள் பாடிய பாடல்களில் காணலாகும் செய்திகளின் வழி ஒப்பிட்டு கரியகடல் எனக் கூறியுள்ள முறைமை தெளிவாகிறது.

இவ்வாறு, சங்கப்புலவர்கள் கூறும் கடலின் நிறம் குறித்த செய்திகளின் வழி கரிய நிறமும், செவ்விய நிறமும் கலந்தது என்ற குறிப்பினையும், கடலானது கரிய நிறமுடையது என்ற குறிப்பினையும், அக்கடலே, நீல நிறமுடையது என்ற பதிவினையும் காண முடிகின்றது. இவ்வாறு, பல்வேறு கருத்துக்களைப் புலவர்கள் தாங்கள் கண்ட அளவில் கூறியுள்ளதன்வழி, கடலின் நிறம் யாது? என்ற மருட்சி ஏற்பட்டு தெளிவின்மையே நீடிக்கிறது. மேலும், சுற்றுச் சூழலின் தன்மைக்கேற்ப கடலின் நிறம் மாறக்கூடியதாக இருக்கிறது என உய்த்துணரவும் வழி கோலுகிறது.

*சான்றெண் விளக்கங்கள்*


*01. நாவலர்.நா.மு.வேங்கடசாமி நாட்டார்: கரந்தை கவியரசு ரா.வேங்கடாசலம்-(உ.ஆசி.) அகநானூறு. ( மணிமிடை பவளம்)., பா.-210, வரி.1-4 ,ப.-212*
*02. பின்னத்தூர் நாராயணசாமி (உ.ஆ.) நற்றிணை., பா.-303, வரி. 6-9, ப.-374*
*03. பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.) .) மதுரைக்காஞ்சி- (மாங்குடி மருதனார் ( நூ.ஆ.) பத்துப்பாட்டு.–II ., வரி.449-450, பக்.-32,147*
*04. நாவலர்.நா.மு.வேங்கடசாமி நாட்டார்:கரந்தை கவியரசு ரா.வேங்கடாசலம்-(உ.ஆசி.) அகநானூறு (நித்திலக்கோவை) ., பா.-360, வரி.6-9, ப.-133*
*05. நச்சினார்க்கினியர் (உ.ஆ.) கலித்தொகை.., பா. -85,வரி.12-14, ப.- 248*
*06. நாவலர்.நா.மு.வேங்கடசாமி நாட்டார்:கரந்தை கவியரசு ரா.வேங்கடாசலம்-(உ.ஆசி.) அகநானூறு. (களிற்றியானை நிரை) ., பா.-100, வரி.5-8, ப.-257*
*07. சித்தாந்த கலாநிதி. வித்துவான். ஔவை.சு.துரைசாமி ( உ.ஆ.) புறநானூறு. , - II ., பா.-4,வரி.14-16, ப.-12*
*08. நாவலர்.நா.மு.வேங்கடசாமி நாட்டார்:கரந்தை கவியரசு ரா.வேங்கடாசலம்-(உ.ஆசி.) அகநானூறு. (களிற்றியானை நிரை) ., பா.-40,வரி. 1-4, ப.-113*
*09. பின்னத்தூர் நாராயணசாமி (உ.ஆ.) நற்றிணை., பா.-45,வரி.1-4, ப.-58*
*10. பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.) ஐங்குறுநூறு., பா.-102, வரி.1-4, ப.-154*
*11. பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.) குறுந்தொகை.,பா.-269, வரி.3-5, ப.-484*


*ஆய்வுக்குத் துணை செய்த நூல்கள்*


*01. சோமசுந்தரனார் பொ.வே. (உ.ஆ.) - குறுந்தொகை .,கழக வெளியீடு, - 2017,சென்னை*
*02. சோமசுந்தரனார் பொ.வே (உ.ஆ.) - ஐங்குறுநூறு., கழக வெளியீடு,- 2009, சென்னை*
*03. சோமசுந்தரனார் பொ.வே. (உ.ஆ.) - மதுரைக்காஞ்சி ,பத்துப்பாட்டு – II., கழக வெளியீடு, -2017, சென்னை*
*04. துரைசாமி ஔவை.சு ( உ.ஆ.) - புறநானூறு - I ., கழக வெளியீடு, -2017, சென்னை*
*05. துரைசாமி ஔவை.சு ( உ.ஆ.) - புறநானூறு , - II .,கழக வெளியீடு, -2016, சென்னை*
*06. நச்சினார்க்கினியர் (உ.ஆ) - கலித்தொகை., கழக வெளியீடு, -2007, சென்னை*
*07. பின்னத்தூர் நாராயணசாமி அ. (உ.ஆ.) - நற்றிணை., கழக வெளியீடு – 2017, சென்னை*
*08. வேங்கடசாமி நாட்டார் நா.மு. (உ.ஆ) வேங்கடாசலம் ரா. கரந்தை கவியரசு - அகநானூறு ( களிற்றியானை நிரை) கழக வெளியீடு -2009 , சென்னை*
*09. வேங்கடசாமி நாட்டார் நா.மு. (உ.ஆ) வேங்கடாசலம் ரா. கரந்தை கவியரசு - அகநானூறு ( மணிமிடை பவளம்) கழக வெளியீடு – 2007, சென்னை*
*10. வேங்கடசாமி நாட்டார் நா.மு. (உ.ஆ) வேங்கடாசலம் ரா. கரந்தை கவியரசு - அகநானூறு (நித்திலக்கோவை) ., கழக வெளியீடு – 2007, சென்னை*


********* ********* ********** ********* ********* ********** ********** **********